# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.39

2006, செப்டம்பர் 2, சனிக்கிழமை

ஆவணி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு – 2037

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

(நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.)

## 1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 141 முதல் 150 வரை உள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டு விடையளிக்கப்பட்டன.

## 2. தகவல் கோரல்

(1) சென்னை வண்டலூர்–கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் (Satellite city) அரசு அமைக்கவிருப்பதால் அங்கு வசிக்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதாகவும் அதனால் அவர்கள் மத்தியில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

(2) முல்லைப் பெரியார் அணை நீர்மட்டத்தை உயர்த்துவது குறித்து திருவாளர்கள் வை. சிவபுண்ணியம், சி. கோவிந்தசாமி, சி. ஞானசேகரன், ஆர். சாமி மற்றும் கி. ஆறுமுகம் ஆகியோர் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

அறிவிப்பு

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.20/2006) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(1) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.20/2006)

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திருவாளர்கள் சி. ஞானசேகரன், கி. ஆறுமுகம், மு. பரஞ்சோதி மற்றும் சி. கோவிந்தசாமி ஆகியோர் விவாதத்தில் கலந்துக்கொண்டனர்.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(2) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.31/2006)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

------

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.28/2006) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(3) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.28/2006)

---

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திருவாளர்கள் சி.வி. சண்முகம், டி. சுதர்சனம், சி. ஞானசேகரன், ஜி.கே. மணி, கே. மகேந்திரன், மற்றும் விடியல் எஸ். சேகர் ஆகியோர் விவாதத்தில் கலந்துக் கொண்டனர்.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

------

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.15/2006) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(4) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.15/2006)

---

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திருவாளர்கள் தி. வேல்முருகன், வை. சிவபுண்ணியம், டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் மற்றும் ப. டில்லிபாபு ஆகியோர் விவாதத்தில் கலந்துக்கொணடனர்.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 22 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 22 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(5) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.26/2006)

-----------------------------------------------------------------------------------------------

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

## அறிவிப்பு

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.29/2006) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(6) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.29/2006)

-----------------------------------------------------------------------------------------------

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திருவாளர்கள் எஸ். பீட்டர் அல்போன்ஸ், ஜி.கே. மணி, என். நன்மாறன், வை. சிவபுண்ணியம் மற்றும் டி. ரவிக்குமார் ஆகியோர் விவாதத்தில் கலந்துக் கொண்டனர்.

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(7) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.27/2006)

---

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(8) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.30/2006)

---

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

5. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு நிதி அமைச்சர் (பேரவை முன்னவர்) அவர்கள் சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.31/2006) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (பேரவை முன்னவர்) அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.31/2006)

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

7. உரிமை மீறல் பிரச்சனை

இன்று (02.09.2006) அவையிலே பேசாத ஒரு பேச்சினை அதுவும் பெண்களை இழிவுபடுத்தி அவையிலே பேசியதாக வெளியிலே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேட்டி கொடுத்திருப்பது குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–இன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

8. வாழ்த்துச் செய்தி

நைஜீரியா நாட்டில் நடைபெறவுள்ள **52**வது காமவெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழக காமன்வெல்த் பாராளுமன்ற சங்க கிளையின் பிரதிநிதியாக பங்கேற்கச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களது பயணம் வெற்றிபெற திருவாளர்கள் டி. சுதர்சனம், ஜி.கே. மணி, செல்வி கே. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. டி. ரவிக்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

9. அறிவிப்பு

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் முதல் மற்றும் இரண்டாவது கூட்டத் தொடர்களில் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட அலுவல்கள் குறித்த முக்கிய விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

10. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25(1) இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை பிற்பகல் 2.47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

மா. செல்வராஜ்
செயலாளர்